**செய்தி வெளியீடு எண்: 258** **நாள்: 16.04.2019**

**செய்தி வெளியீடு**

மக்களவை பொதுத் தேர்தல் 2019–க்காக ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் சட்ட விரோத பண பரிவர்த்தனைகள் அல்லது மதுபானம் விநியோகம் அல்லது இதர பொருட்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்படுவதை கண்காணிக்கும் பொருட்டு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளது. பண விநியோகம், அதிக அளவிலான பணம் பதுக்குதல், சட்டவிரோத மது விற்பனை, சந்தேகத்திற்கிடமான பொருட்கள், ஆயுதங்கள் வைத்திருப்பதை கண்காணிக்கும் பொருட்டு நிலையான கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, மக்களவை பொதுத் தேர்தல் 2019–க்காக பறக்கும்படை வாகனங்கள், நிலையான கண்காணிப்பு குழு வாகனங்கள் மற்றும் வாக்கு இயந்திரம் / வாக்காளர் சரிபார்க்கும் காகித தணிக்கை சோதனை இயந்திரங்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் GPS பொருத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மாநில அளவிலான கட்டுப்பாட்டு மையம் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது, (தேவையான உள்கட்டமைப்பு மற்றும் பணியாளர்களுடன்) வாகன கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறையை கண்காணிக்கும் பொருட்டு இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டுள்ளனர் (28.03.2019 முதல் 18.04.2019 வரை). இந்த இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்களும் கட்டுப்பாட்டு அறையில் வாகன இயக்கங்களைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட பணியாளர்களை கண்காணித்து வருகின்றனர், (i.e. 13 persons on 2 shifts). இவர்கள் மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு அறையின் உதவியுடன் செலவின கண்காணிப்பு மற்றும் அதன் பிரச்சினைகளை தீர்க்கவும் செய்கின்றனர். Garuda என்ற வலைப்பக்க சேவை மற்றும் செயலி மூலம் GPS பொருத்தப்பட்டுள்ள வாகனங்கள் Online மூலம் கண்காணிக்கப்படுகிறது. இந்த Garuda அமைப்பு மூலம் மைய அளவிலான கட்டுப்பாட்டு மையமும், மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு மையமும் 2089 வாகனங்களின் இயக்கம் மற்றும் செயல்களை Online மூலம் கண்காணித்து வருகிறது.

பறக்கும் படைகள்/ நிலையான கண்காணிப்பு குழுவிற்கு வழங்கப்பட்ட Garuda app–ல் தினசரி பறிமுதல் செய்யப்படும் விவரங்களை உள்ளீடு செய்யும் வசதி உள்ளது. உள்ளீடு செய்யப்பட்ட விவரங்கள் தலைமை தேர்தல் அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகம் அளவில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**